பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
26 11 2024 6 45
செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- அரசியல் சாசன தினம் இன்று கொண்டாடப்படுவதையொட்டி நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் கூட்டுக்கூட்டத்தில் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு உரையாற்றுகிறார்.
- நாடு முழுவதும் 2 ஆயிரத்து 481 கோடி ரூபாய் மதிப்பில் இயற்கை வேளாண்மைக்கான தேசிய இயக்கத்தை செயல்படுத்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- கூட்டுறவு சங்கங்களின் சேவைகள் மற்றும் தயாரிப்புகளுக்கு சரக்கு மற்றும் சேவை வரியிலிருந்து விலக்க அளிக்க வேண்டும் என்று மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்தியுள்ளது.
- வங்கக்கடலில் உருவாகியுள்ள காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் காரணமாக, காவிரி டெல்டா மாவட்டங்களில் ஒருசில இடங்களில் இன்று அதிகனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- ஆசிய கூடைப்பந்து தகுதிச் சுற்றுப் போட்டியில் இந்தியா - கஜகஸ்தானை வென்றது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

அரசியல் சாசன தினம் நாடு முழுவதும் இன்று கொண்டாடப்படுகிறது.

அரசியலமைப்புச் சட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவடைவதைக் கொண்டாடும் வகையில் இன்று முதல் ஓராண்டுக்கு இது தொடர்பான கொண்டாட்டங்கள் நடைபெறும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

அரசியல் சாசன தினத்தை முன்னிட்டு, நாடாளுமன்றத்தில் இன்று நடைபெறும் நிகழ்ச்சியில் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் உறுப்பினர்களிடையே உரையாற்றவுள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு ஜெகதீப் தன்கர், பிரதமர் திரு நரேந்திர மோடி, மக்களவைத் தலைவர் திரு ஓம் பிர்லா, மத்திய அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்க உள்ளனர்.

இந்திய அரசியலமைப்பு சட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டு 75-வது ஆண்டு நிறைவடைவதை முன்னிட்டு சிறப்பு நாணயம் மற்றும் சிறப்பு தபால் தலையும் வெளியிடப்படவுள்ளது.

அரசியல் சாசனம் தொடர்பான இரு நூல்களும் இன்று வெளியிடப்படவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அரசியல் சாசன தினத்தையொட்டி, நாடு முழுவதும் கல்வி நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்களில் அரசியல் சாசனத்தின் முகப்புரையை வாசிக்கும் நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளது.

<<<<>>>>

நாடு முழுவதும் 2 ஆயிரத்து 481 கோடி ரூபாய் மதிப்பில் இயற்கை வேளாண்மைக்கான தேசிய இயக்கத்தை செயல்படுத்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் நேற்று நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதுதொடர்பாக புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், இந்த இயக்கத்தின்கீழ், நாடு முழுவதும் ஏழரை லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் இயற்கை வேளாண்மை ஊக்குவிக்கப்படும் என்றார்.

ஒரு கோடி விவசாயிகள் இதில் பயனடைவார்கள் என்றும், மண்ணின் தரத்தை மேம்படுத்தவும், ரசாயனமற்ற உணவு உற்பத்தியை மேற்கொள்ளும் நோக்கிலும் இந்த இயக்கம் செயல்படுத்தப்படுவதாக அவர் தெரிவித்தார்.

ஆராய்ச்சி மாணவர்கள் பயனடையும் வகையில் ‘ஒரே நாடு – ஒரே சந்தா’ திட்டத்திற்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக திரு. அஷ்வினி வைஷ்ணவ் குறிப்பிட்டார்.

இத்திட்டம் 6 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் அடுத்த 3 கல்வியாண்டுகளுக்கு அனைத்து உயர்கல்வி நிறுவனங்களிலும் செயல்படுத்தப்படும் என்று அவர் கூறினார்.

இதன் மூலம் ஆய்வுக் கட்டுரைகளை மாணவர்கள் எளிதில் அணுக முடியும் என்று அவர் தெரிவித்தார்.

அடல் புதுமை இயக்கத்தை 2028ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை நீட்டிப்பதற்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதற்கு 2 ஆயிரத்து 750 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என்று திரு. அஷ்வினி வைஷ்ணவ் குறிப்பிட்டார்.

<<<<>>>>

கூட்டுறவு சங்கங்களின் சேவைகள் மற்றும் தயாரிப்புகளுக்கு சரக்கு மற்றும் சேவை வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்று மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்தியுள்ளது.

புதுதில்லியில் மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. அமித் ஷாவை தமிழக கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் நேற்று நேரில் சந்தித்து கோரிக்கை மனு ஒன்றை அளித்தார்.

நபார்டு வங்கி வழங்கும் சலுகை மற்றும் மறு நிதியளிப்பு, மாநிலத்தில் உள்ள கூட்டுறவு அமைப்புகளின் குறுகிய கால கடன் அளவிற்கு ஏற்ப உயர்த்தி வழங்கப்பட வேண்டும் என்று அதில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மத்திய அரசின் வித்யாலட்சுமி திட்டம், சூரியமின் திட்டம் போன்ற திட்டப் பயனாளிகளுக்கு கடன் வழங்க தகுதியான வங்கிகளின் பட்டியலில் கூட்டுறவு வங்கிகளும் சேர்க்கப்பட வேண்டும் என்று அந்த மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் வாக்காளர் பட்டியலில் திருத்தங்களை மேற்கொள்தற்காக வாக்குச்சாவடி மையங்களில் நடத்தப்பட்ட சிறப்பு முகாம்களில் மொத்தம் 14 லட்சத்து 615 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

பெயர் சேர்ப்பதற்காக 8 லட்சத்து 38 ஆயிரத்து 16 பேரும் பெயரை நீக்கக் கோரி ஒரு லட்சத்து 19 ஆயிரத்து 701 மனுக்களும் பெறப்பட்டுள்ளதாக தமிழக தலைமைத் தேர்தல் ஆதிகாரி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முகவரி மாற்றம், புகைப்பட மாற்றம் போன்றவற்றுக்காக 4 லட்சத்து 42 ஆயிரத்து 111 பேர் விண்ணப்பித்து இருப்பதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறப்பு முகாம்களில் விண்ணப்பங்களை அளிக்காதவர்கள் இம்மாதம் 28-ம் தேதி வரை சம்பந்தப்பட்ட அலுவலகங்களிலோ அல்லது இணையதளம் மூலமாகவே விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம் எனவும் இறுதி வாக்காளர் பட்டியல் ஜனவரி 6-ம் தேதி வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழக அரசின் நிர்வாகச் சீர்கேடுகளை மறைக்கும் முயற்சிகளில் திமுக ஈடுபட்டு வருவதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் மருத்துவர் ராமதாஸ் தெரிவித்த கருத்துகள் குறித்து செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு, முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தரக்குறைவான முறையில் பதிலளித்திருப்பது கண்டிக்கத்தக்கது என குறிப்பிட்டுள்ளார்.

கேள்வியின் உண்மையை எதிர்கொள்ள இயலாமல், இது போன்ற முறையில் முதலமைச்சர் பதிலளித்திருப்பதாக திரு அண்ணாமலை கூறியுள்ளார்.

<<<<>>>>

வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் இன்று ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறுக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக நாகப்பட்டினம், திருவாரூர், மயிலாடுதுறை மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒருசில இடங்களில் அதிகனமழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

இதையடுத்து இந்த 3 மாவட்டங்களிலும் பள்ளி, கல்லூரிகளுக்கு இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

தஞ்சாவூர், கடலூர், புதுக்கோட்டை உள்ளிட்ட மாவட்டங்களின் சில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இதையடுத்து தஞ்சை மாவட்டத்தில் பள்ளிகளுக்கு மட்டும் இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

அதிகனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் வட்டார அளவில் பொறுப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

அரசுத் திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் நிதி, மக்களுக்கு முழுமையாக சென்றடைவதை உறுதி செய்வதில் கணக்கு மற்றும் தணிக்கை துறை முக்கியப் பங்காற்றுவதாக தமிழக சட்டப்பேரவைத் தலைவர் திரு. அப்பாவு கூறியுள்ளார்.

சென்னையில் இந்திய கணக்கு மற்றும் தணிக்கை துறை சார்பில் நடைபெற்ற கணக்குத் தணிக்கை வார விழா நிறைவு நிகழ்ச்சியில் நேற்று அவர் பங்கேற்றுப் பேசினார்.

சட்டப்பேரவை மற்றும் நாடாளுமன்றத்தால் ஒதுக்கப்படும் நிதிகள் சம்பந்தப்பட்ட பணிகளுக்கு முறையாக செலவிடப்படுகிறதா என்பதை ஆய்வு செய்து குறைகள் இருந்தால் அதை கணக்குத் தணிக்கைத் துறை சுட்டிக்காட்டுவதாக அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் வளர்ச்சிக்கு கணக்குத் தணிக்கைத்துறை முக்கிய பங்காற்றுவதாகவும் திரு. அப்பாவு கூறினார்.

<<<<>>>>

*__இருவரிச் செய்திகள்__*

உருகுவே நாட்டில் நடைபெற்ற அதிபர் தேர்தலில், எதிர்க்கட்சி வேட்பாளர் திரு யமண்டு ஓர்சி வெற்றி பெற்றுள்ளார்.

<<<<>>>>

லெபனானுடன் சண்டைநிறுத்தம் மேற்கொள்வது குறித்து இஸ்ரேல் அமைச்சரவை இன்று ஆலோசனை நடத்தவுள்ளது.

<<<<>>>>

கலாச்சாரப் பரிமாற்றம் தொடர்பாக 84 நாடுகளுடன் இந்தியா, புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளதாக மத்திய கலாச்சாரத் துறை அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

<<<<>>>>

அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான இ-ஷ்ரம் இணையதளத்தில் இதுவரை 30 கோடியே 40 லட்சம் பேர் பதிவு செய்துள்ளதாக மத்திய தொழிலாளர் நலத்துறை இணையமைச்சர் திருமதி ஷோபா கரந்த்லாஜே தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

கடலூர் மஞ்சக்குப்பம் சுப்புராயலு பூங்காவை நேற்று நேரில் ஆய்வு செய்த துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின், அந்தப் பூங்காவை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

<<<<>>>>

தேசிய மாணவர் படை நிறுவன தின வாரத்தையொட்டி தருமபுரி மாவட்டம் இருமத்தூர் தென்பெண்ணை கரையோரப் பகுதியில் தேசிய மாணவர் படை சார்பில் தூய்மைப் பணி மேற்கொள்ளப்பட்டது.

<<<<>>>>

கார்த்திகை தீபத்திருவிழாவின்போது திருவண்ணாமலையில் பக்தர்களின் பாதுகாப்பிற்காக 18 காவல்துறை பறக்கும் படைகள் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளதாக வடக்கு மண்டல காவல் துறை தலைவர் திரு. அஸ்ரா கர்க் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தென்காசி மாவட்டம் ஆயக்குடியில் அரசியல் சாசன தினத்தையொட்டி நடைபெற்ற பேச்சுப்போட்டி, கட்டுரை போட்டி உள்ளிட்ட பல்வேறு போட்டிகளில் 300-க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பங்கேற்றனர்.

<<<<>>>>

சேலத்தில் பள்ளிக் கல்வித் துறை சார்பில் நடைபெற்ற மாவட்ட அளவிலான அறிவியல் போட்டியில், 6ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் அரசுப் பள்ளி மாணவர்கள் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தங்களது படைப்புகளைக் காட்சிப்படுத்தினர்.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய கூடைப்பந்து தகுதிச் சுற்றுப் போட்டியில் இந்தியா - கஜகஸ்தானை வென்றது.

சென்னை நேரு விளையாட்டு அரங்கில் நேற்று நடைபெற்ற இந்த ஆட்டத்தில் 88-69 என்ற புள்ளிக் கணக்கில் இந்தியா வெற்றி பெற்றது.

பிப்ரவரி மாதத்தில் நடைபெறும் அடுத்த தகுதிச் சுற்று ஆட்டங்களில் இந்தியா, ஈரான் மற்றும் கத்தாரை எதிர்கொள்ளவுள்ளது.

<<<<>>>>